*2017 ஜூன் 15]* **[திரு. பா. பென்ஜமின்]**

*நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் வரையில் வங்கிக் கடன் பெற உதவி செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆ) மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு நடத்தப்பட்ட NEET (National Eligibility cum Entrance Test) தேர்வு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் என் அறையிலே வந்து கேட்டார்கள். அதை* Zero hour*–ல் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நான் வேறு அலுவலுக்குப் போய்விட்டேன். நீங்கள் அப்போது வெளிநடப்புச் செய்திருந்தீர்கள். இருந்தாலும் இன்றைக்கு ஒரு சிறப்பு நேர்வாக உங்களுக்கு நான் அனுமதியளிக்கிறேன். இதை சிறப்பு நேர்வாகக் கருதி, தகவல் கோரல் என்ற முறையிலே உங்களுக்கு நான் அனுமதியளிக்கிறேன். நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ அதை சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NEET *என்று சொல்லக்கூடிய* National Eligibility cum Entrance Test *இன்றைக்கு தமிழகம் முழுவதும் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டிலே குறிப்பாக கிராமப்புற மாணவர்களை பெரிய அளவிலே பாதிக்கக்கூடிய சூழ்நிலை நிலவி வந்திருக்கிறது. இதிலே* eligibility, *அதாவது தகுதி என்கின்ற ஒரேயொரு வார்த்தையை வைத்துக்கொண்டு 1918 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 100 ஆண்டு காலமாக நாம் போராடிப் பெற்று வந்திருக்கக்கூடிய உரிமைகளை எல்லாம் இன்றைக்கு மத்திய அரசாங்கம் பறிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 2016–2017 மேல்நிலைத் தேர்வுகளைப் பொறுத்தமட்டிலே, 4.20 இலட்சம் பேர் மேல்நிலைத் தேர்வு எழுதியதிலே 6,870 பேர்கள்தான்* C.B.S.E. *மாணவர்கள். ஆனால் 98 சதவிகிதம் மாணவர்கள் மாநிலத் திட்டத்தில் படித்தவர்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, வெறும் 6,870 பேர்கள் எழுதியிருக்ககூடிய* C.B.S.E. *பாடத்திட்டத்தின் அடிப்படையிலே இந்த* NEET *தேர்வு நடைபெறுவது என்பது சமூக நீதிக் கொள்கைக்கும், மாநில உரிமைகளுக்கும் முற்றிலும் மாறாக இருக்கிறது. கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்களோடு போட்டி போட முடியாத*

*நிலை இருக்கிறது.* Level playing ground, *அதாவது தேர்வுகளிலே ஒரு சமகளம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. குறிப்பாக இந்தத் தேர்வுகளுக்கு தயார் செய்யக்கூடிய* coaching classes, *பயிற்சி வகுப்புகள் கிராமப்புற மாணவர்களிடையே இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. எல்லாவற்றையும் தாண்டி மாநில உரிமைகளில் மத்திய அரசாங்கம் முழுமையாகத் தலையிடக் கூடிய ஒரு நிலையும், கூட்டாட்சி முறைக்கு பெரிய வேட்டு வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரேயொரு விஷயத்தை மட்டும் நான் இங்கே தெளிவாகச் சொல்ல வேண்டும்.*

*முற்பகல் 11–35*

*பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் நாம் இந்த ஆண்டு ரூ.27,000 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஆக, ரூ.27,000 கோடி நிதி ஒதுக்கி 1 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை ஒரு மாணவனை நாம் படிக்க தயார் செய்கிறோம். அவ்வளவு தொகையை ஒதுக்கி 12 வருடங்களில் 12 ஆம் வகுப்பு வரை படித்து முடித்த பிறகு, மத்திய அரசாங்கம் ஒரே வார்த்தையில் மருத்துவப் படிப்பிற்கு அந்த மாணவனுக்குத் தகுதி இல்லை என்று சொல்கிறது. மத்திய அரசு ஒரு தேர்வை நடத்தி அதில் தேர்ச்சி பெறுவதுதான் தகுதி என்று சொல்கிறது. ஆக, கிட்டத்தட்ட 26,000, 27,000 கோடி ரூபாய் செலவழித்து, மாணவர்களை உருவாக்கிக் கொண்டு வந்த பிறகு அவர்களுக்கு மருத்துவப் படிப்பு படிக்க அனுமதி கிடையாது, தகுதி இல்லை என்று மத்திய அரசு சொல்கிறது. அதனால் தகுதி என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு மிகப் பெரிய சிரமம் ஏற்படுகிறது.*

*நான் ஓர் எளிய உதாரணத்தை இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவம் படிக்க* NEET *தேர்வு அவசியம், அதுதான் தகுதி என்று சொல்கிறோம். +2 மதிப்பெண் அடிப்படையில் தகுதி இல்லை என்று சொல்கிறோம். ஆனால், +2 மதிப்பெண்ணை அடிப்படையாக வைத்து* B.Sc., Chemistry *பட்டப் படிப்பினைப் படிக்கும் மாணவர்கள் மேற்கொண்டு* M.Sc., Chemistry *படிக்கலாம். அதற்குப் பிறகு* Ph.D. *படிக்கலாம்.* Ph.D. *முடித்துவிட்டு ஒரு* Pharmaceutical Company*–ல் சேர்ந்து, அவரே மருந்து தயாரிக்கக்கூடிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிக்கலாம்; அவரே மருந்து தயாரிக்கலாம்; அவர் தயாரித்த மருந்து பல உயிர்களைக் காப்பாற்றலாம். ஆக, மாணவர்கள்*

*2017 ஜூன் 15]* **[திரு. தங்கம் தென்னரசு]**

NEET *தேர்வு எழுதாமல், +2 வகுப்பு வரை படித்துவிட்டு, மருந்து தயாரிக்கும் நிறுவனத்தில் சேர்ந்து, உயிர் காக்கும் மருந்து தயாரிக்கலாம்; அதற்கு +2 படிப்புத் தகுதி போதும் என்றால், அவர் தயாரிக்கும் மருந்தை எழுதிக் கொடுக்கின்ற மருத்துவருக்கு +2 படிப்பு தகுதியில்லை என்று சொன்னால், அது எந்த அடிப்படையில் சொல்லப்படுகிறது என்பதுதான் என்னுடைய அடிப்படைக் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)*

*நான் இன்னும் மூன்று விஷயங்களை நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மிக முக்கியமான விஷயம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தகவல் கோரல் என்ற முறையில்தான் நான் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். மிகப் பெரிய விவாதமெல்லாம் வேண்டாம். சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மூன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். அதைப் பற்றி அவருக்கும் தெரியும். இது சார்ந்த சட்ட மசோதாக்களை இந்த அவையில் நிறைவேற்றியிருக்கிறோம். இதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய மூன்று விஷயங்கள் என்னவென்றால், (1)* Parliament Standing Committee*–ல் கொடுத்திருக்கக்கூடிய 92–வது அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 8–3–2016 அன்று திருவாளர் ராஜ் சௌத்ரி தலைமையிலான வல்லுநர் குழுவின் அறிக்கையில்* Common Medical Entrance Test *என்றுதான் முதலில் சொல்லியிருக்கிறார்கள். அதில், இதை விரும்பாத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. (2) அதன் பிறகு, அரசியல் சட்டத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட* Constitutional Bench *என்ன சொன்னார்கள் என்றால், தேர்வு முறையை நிர்ணயிக்கக்கூடிய உரிமை மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது; உயர் கல்விக்கான தேர்வு நடத்தக்கூடிய உரிமை மத்திய அரசாங்கத்திற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். (3) ஏற்கெனவே ஒரு வருடம் விலக்கு கொடுத்தபோது, மத்திய அரசாங்கம்* Parliament*–ல் அதற்கான மசோதா தாக்கல் செய்யும்போது முக்கியமான*

*கருத்தைத் தெரிவித்தது. நோக்கக் காரண விளக்கவுரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாடத் திட்டத்தில் வேறுபாடு இருக்கிறது. அடிப்படையில் மத்திய அரசின் பாடத் திட்டத்திற்கும் மாநில அரசின் பாடத் திட்டத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. இந்த வேறுபாடு இன்னமும் களையப்படவில்லை. இன்றைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது எதற்காக இந்த NEET தேர்வு வருகிறது என்பது முக்கியமான ஒரு கேள்வியாக இருக்கிறது. குறிப்பாக. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *போதும். இதோடு முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) ஒரு சிறப்பு நேர்வாகத்தான் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *முடித்துவிட்டேன். இன்னும் ஒரே ஒரு பாயின்ட்தான் இருக்கிறது. (குறுக்கீடு) அவ்வளவுதான். இப்போது முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டே கேள்விகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முதலாவதாக, இம்மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும், தமிழ்நாட்டில் NEET தேர்வு நடத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக போய்ச் சேரவில்லை என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதன் நிலைமை என்ன?*

*இதற்கிடையில் தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கக்கூடிய NEET தேர்வில் மனித உரிமைகளை மீறக்கூடிய மையங்களாக மாறியிருக்கின்றன. முழு கை சட்டையை வெட்ட வேண்டும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதெல்லாம் எதற்கு பேச வேண்டும்? நீங்கள் NEET தேர்வைப் பற்றிப் பேசுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) NEET தேர்வைப் பற்றிப் பேசுவதோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. தங்கம் தென்னரசு:** *ஒரு கேள்வியுடன் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் பேசி முடியுங்கள். பெரிய விவாதமெல்லாம் வேண்டாம்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *விட்டுவிடுங்கள். நான் இந்த அரசாங்கத்திடம் கேட்க விரும்புகின்ற ஒரே ஒரு கேள்வி என்னவென்றால்,* NEET *தேர்வு குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?* I find that there is a clear case of conflict of interest between the School Education Department and the Health Department. *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வரும் காலங்களில்* NEET *தேர்வுக்காக மாணவர்களைத் தயார் செய்வோம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்* NEET *தேர்வை அடியோடு எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இதே அவையில்* NEET *தேர்வை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள். நான் இப்போது உங்களிடம் கேட்கக்கூடிய கேள்வி, இந்த அமைச்சரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* NEET *தேர்வைப் பற்றி என்ன கொள்கை முடிவு எடுக்கப்போகிறார்கள் என்பதுதான்.* NEET *தேர்வை வேண்டாம் என்று சொல்லப்போகிறீர்களா? இல்லை, அடிப்படையில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு மாணவர்களைத் தயார் செய்யப்போகிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது இனி வருங்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்பதற்கான விடைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்பி தங்கள் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு* clarifications*–ஐ, மாண்புமிகு முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்ட அத்தனை தெளிவான கேள்விகளுக்கும் மிகத் தெளிவான பதில்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலாவதாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அமைச்சரவை, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், உயர் கல்வித் துறை அமைச்சர் ஆகிய அனைவருமே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கைகளிலே இந்த நிமிடம் வரை உறுதியாக இருக்கின்றோம். அந்தக் கொள்கை*

என்னவென்றால், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்துவது மாநிலத்தின் உரிமையை நேரடியாக பாதிக்கும்.

*முற்பகல் 11–40*

ஏற்கெனவே நேர்மையான, வெளிப்படையான +2 அடிப்படையிலான ஒரு சேர்க்கை முறை தமிழக அரசினுடைய கொள்கையினால் செயல்பட்டு வருகிறது. ஆக, இப்படி NEET–ஐ புகுத்துவது என்பது மாநிலத்தினுடைய உரிமையை பாதிக்கும். அதனால் இந்த தேசிய தகுதி நுழைவுத் தேர்விலிருந்து தமிழ்நாடு அரசிற்கு விலக்களிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற அந்த நிலைப்பாட்டிலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருமே மாண்புமிகு அம்மா அவர்களது கொள்கையிலே இந்த நிமிடம் வரை உறுதியாக நிலையாக இருக்கின்றோம் என்பதை நான் உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதன் அடிப்படையிலேதான் கடந்த முறை நாம் ஓராண்டு விலக்கு பெற்றோம். அதற்குப் பிறகு இந்த ஆண்டும் அதே சூழ்நிலை வந்துள்ளது. இந்த ஆண்டு, எந்த காலதாமதமும் இல்லாமல் சட்டமன்றம் தொடங்கியவுடனே, குறித்த காலத்திலே இதற்கென திட்டமிட்டு, உடனடியாக இரண்டு மசோதாக்களை நாம் ஏகமனதாக நிறைவேற்றினோம். நீங்களும் ஆதரவு தெரிவித்திருந்தீர்கள். எல்லோரும் ஆதரவு தெரிவித்தபின் நாம் மசோதாக்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். இப்பொழுது நீங்கள் சொன்னதுபோல ஒரு clarification உங்களுக்கே வந்தது. நாம் இப்பொழுது ஊடகங்களைப் பார்க்கும்போது, எல்லா ஊடகங்களும் வேதனை அளிக்கக்கூடிய அளவுக்கு பல செய்திகளைப் பற்றி, பல்வேறு கருத்துகளை அவரவர் போக்கிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஒரு தெளிவான உண்மை என்று சொன்னால் சட்ட மசோதாவை பொறுத்தவரைக்கும் நாம் இங்கே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினோம். நிறைவேற்றியவுடன் ஆளுநர் ஒப்புதல் கொடுக்கிறார். ஆளுநர் ஒப்புதல் கொடுத்தவுடன் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறோம். மத்திய அரசில் இந்த மசோதா நேரடியாக M.H.A. என்று சொல்லக்கூடிய மத்திய உள் துறையினுடைய சட்டப் பிரிவு வாயிலாகத்தான் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதியின் ஒப்புதலுக்குச் செல்லும். அப்படி ஒப்புதலுக்குச் செல்வதற்குமுன்

இரண்டு துறைகளின் கருத்துகளை அவர்கள் கேட்கிறார்கள். ஒன்று, மத்திய சுகாதாரத் துறை—Union Health Ministry. இன்னொன்று மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை–Union HRD Ministry. இரண்டு துறைகளிலும் அவர்களுடைய கருத்துகளைக் கேட்கின்றபொழுது அவர்கள் நீங்கள் சாதகமாக முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே நீங்கள் இரண்டு முறை என்று சொன்னதுபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரண்டு முறை பாரதப் பிரதமரைச் சந்தித்து NEET–க்கு விலக்களிக்க வேண்டும் என்று நேரடியாகவே அவர்கள் வலியுறுத்தினார்கள். மனுக்களைக் கொடுத்தார்கள். Memoranda–ல் main agenda–ஆக சேர்த்தோம். அதற்கு பிறகு தலைமைச் செயலர் (Chief Secretary) அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுடைய தனிச் செயலரைச் சந்தித்தார்கள். இரண்டு நாட்கள் டில்லியிலே முகாமிட்டு இந்த ஒரே பிரச்சினைக்காக தலைமைச் செயலாளருடனும், நம்முடைய சுகாதாரத் துறை செயலாளருடனும் சென்று வலியுறுத்தினோம். அதற்குப் பிறகு, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். அப்பொழுது நம்முடைய முதலமைச்சர், நான், சட்டத் துறை அமைச்சர், உயர் கல்வித் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், அவர்களிடத்தில் வலியுறுத்தினோம். அதற்குப் பிறகு நானும், என்னுடைய துறையின் அனைத்து செயலாளர்களும் சென்று டில்லியிலே மத்திய சுகாதாரத் துறை அமைச்சரை, மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரை, மத்திய சட்டத் துறை அமைச்சரை தனித்தனியாகச் சந்தித்து, "உங்களிடம் கருத்து கேட்பார்கள். MHA–ன்மூலமாக Union Minister–இடம் கருத்து கேட்பார்கள். எங்களுக்குச் சாதகமாக நீங்கள் justification கொடுங்கள். சட்டத் துறை அமைச்சரிடம், கருத்து கேட்பார்கள். எங்களுக்குச் சாதகமாக பதில் சொல்லுங்கள். HRD அமைச்சரிடம் கருத்து கேட்பார்கள். எங்களுக்குச் சாதகமாக பதில் சொல்லுங்கள்." என்று நேரடியாக கருத்து கேட்பதற்கு முன்னால் நாங்கள் வலியுறுத்தினோம். இருந்தாலும்கூட அவர்கள் பல்வேறு clarifications இரண்டு முறை கேட்டார்கள். இரண்டு முறையும் தமிழ்நாடு சுகாதாரத் துறை சார்பிலே கடிதம் மூலமாக proper justification, written justification கொடுத்துவிட்டோம். இதையும்தாண்டி இன்றைக்கு நிலை என்னவென்று சொன்னால், மத்திய சுகாதாரத் துறையும் நமக்கு சாதகமாக அங்கே பதிலளிக்கவில்லை. மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையும் சாதகமாக பதில் அளிக்கவில்லை. இந்த நிலையில் சாதகமாக பதில் அளிக்காவிட்டாலும்கூட எங்களுடைய

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூன் 15

கருத்துகளின்படி முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் இப்பொழுது மத்திய M.H.A Department–ல் இருக்கிறது. அவர்கள் இன்னமும் ஜனாதிபதிக்கு அதை அனுப்பவில்லை. இதுதான் நிலைமை. இந்த இடத்திலும்கூட இப்பொழுது கடைசியாக இரண்டு clarifications கேட்டார்கள். நாங்களும், Law Minister–ம் அந்த clarifications–க்கு பதில் அனுப்பினோம். ஏனென்றால், மாணவர்களின் உணர்வுகள் என்பது மிகவும் முக்கியம். மாணவர்களின் உணர்வைப் புரிந்துகொள்ளக்கூடிய அரசு அம்மாவுடைய அரசு. பெற்றோர்களும் பதைபதைப்போடு இருக்கிறார்கள். அந்த உணர்வையும் நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம். ஆசிரியர்களும் பதைபதைப்போடு இருக்கிறார்கள். அந்த உணர்வையும் புரிந்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது NEET தேர்வு நடந்திருக்கிறது. தேர்வு முடிவு வெளியாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அத்தனை பேர்களுடைய உணர்வுகளையும் புரிந்துகொண்ட காரணத்தினால்தான் தொடர்ந்து இந்த நிலையிலேயே நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது நாம் MHA–க்கு சாதகமாக முடிவெடுக்க வேண்டுமென்று அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அரசியல்ரீதியாகவும் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். சட்டரீதியாகவும் போராடிக் கொண்டிருக்கின்றோம். உங்களுடைய கருத்தையும் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றோம். இன்னமும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. இறுதி முடிவை, தமிழ்நாட்டிற்கு விலக்களிக்கும் முடிவை எட்ட வேண்டுமென்ற ஒற்றைக் கொள்கையில் நாங்கள் அத்தனை பேரும் உறுதியாக இருக்கின்றோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. இதற்கு நடுவில், உங்களுக்குத் தெரியும். மதுரை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு வந்தது. அதில், நடைபெற்ற இந்த NEET தேர்வுக்குத் தடையாணை பெறப்பட்டது. உங்களுக்கு ஒரேயொரு கருத்தை நான் தெளிவுபடகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மதுரை நீதிமன்றத்தில் இந்த வழக்கு தடையாணை பெற்றவுடனே தமிழ்நாடு அரசினுடைய நிலைப்பாடு என்ன என்று கேட்கிறார்கள். நான் மிகவும் தெளிவாக சொல்கிறேன். தமிழ்நாடு அரசு, நாம் firm–ஆக, stubborn–ஆக, transparent–ஆக affidavit கொடுத்தோம். மத்திய அரசிற்கும், இந்த நீதிமன்றத்திற்கும் அரசுச் செயலாளர் affidavit கொடுத்தார். நாங்கள் NEET–க்கு exemption வேண்டும் என்ற கொள்கையிலே உறுதியாக இருக்கிறோம் என்று affidavit கொடுத்தோம். இன்னும் சொல்லப்போனால் மாணவர்களுடைய உணர்வை, பெற்றோர்களுடைய உணர்வை நாங்கள் எடுத்துச்

சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம். நடைபெற்றிருக்கக்கூடிய +2 based mark அடிப்படையிலே எடுக்கக்கூடிய இந்த system ரொம்ப transparent ஆன system. இன்னும் சொல்லப் போனால், நீங்கள் சொன்னது மாதிரி 4.2 இலட்சம் பேர் 6,877 பள்ளிகளில் State Board Syllabus–ல் எழுதியிருக்கிறார்கள். வெறும் 268 பள்ளிகளில் 4,675 மாணவர்கள் CBSE syllabus–ல் எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கு CBSE தேர்வு எழுதியிருக்கும் எல்லோருமே நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்கள்.

முற்பகல் 11–45

State Board–ல் படிப்பவர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள். இதை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் ஒரு கருத்தைக் கேட்டீர்கள். கல்விக்கென்று 27 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. ஏன் CBSE–யோடு compete செய்ய முடியவில்லை என்று கேட்டீர்கள். That is separate. அதாவது, மாநில கல்வி என்பது மிக மிகத் தரமான கல்வி. அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. அதைப்போல மத்திய CBSE கல்வியும், ஒரு தரமான கல்வி. அதிலும் நமக்கு மாற்றம் இல்லை. ஆனால், என்ன பிரச்சினை என்றால், நாங்கள் நீதிமன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். Method of syllabus is different, method of teaching is different and method of evaluation of examination is different. இப்படித்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு கல்வித் துறை தனிப்பட்ட முறையில், 'NEET' போன்ற எந்தத் தேர்வுகளையும் எதிர்கொள்ளக்கூடிய அளவிற்கு நம்முடைய மாணவர்களைத் தயார்படுத்த வேண்டுமென்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் இவர்களெல்லாம் சிறப்பாக பல்வேறு கோணங்களில் அவர்களை தனியாக தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் மிகச் சிறப்பாக நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மிக சுறுசுறுப்பாக அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதையும் நான் சட்டமன்றத்திலே தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அதையும் தாண்டி, இவை எல்லாவற்றையும் நாங்கள் மதுரை High Court–ல், affidavit–ல் சொல்லிவிட்டு, எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மிகவும் clear ஆக இருக்கிறோம். We are not fighting for deemed Universities, we are not fighting for self–financing colleges management quota. அரசுக் கல்லூரிகளில், counseling–ல் ஏழையெளிய மாணவர்கள்

*படிக்கக்கூடிய 2,480 சீட், அதன்பிறகு 1,198 சீட் என மொத்தம் 3,678 இடங்கள், ஏழையெளிய மாணவர்களுக்கு இடங்கள், 16,000 ரூபாய்* fees *கட்டி படிக்கக்கூடிய இந்த இடங்களுக்காக மட்டும்தான் இந்த அரசு போராடிக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் பிரமாணப் பத்திரத்தின்மூலம்,* affidavit *மூலமாக மத்திய அரசுக்கும், நீதிமன்றத்திற்கும் நாங்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) பிரமாணப் பத்திரத்தின்மூலம், அதாவது* affidavit *மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) ஒரு நிமிடம், நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கேட்டதற்கு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், விடுங்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *இதற்கு நடுவில் உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) இப்பொழுது உச்ச நீதிமன்றத்தில், எல்லா* cases*—யையும்—எந்த உயர் நீதிமன்றமும்* case*—ஐ எடுக்கக்கூடாது. எந்த ஒரு* District Court*—ம், நீங்கள் தீர்ப்பு சொல்லக் கூடாது. உச்ச நீதிமன்றத்திலேதான் இந்த* case *சம்பந்தமாக நீங்கள் செல்ல வேண்டும் என்று சொல்லி, நீங்கள்* proceed *செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதாவது* result*—ஐ* proceed *செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது* tentative *ஆக 26 ஆம் தேதி இந்த* 'NEET' *தேர்வுக்கான முடிவுகள் வெளிவருவதற்குண்டான வாய்ப்புகள் இருப்பதாக எங்களுக்குத் தெரிகிறது.* 'NEET' *தேர்விற்கான முடிவுகள் வெளிவரப் போகிறது என்றால், இதற்கு நடுவில், இவ்வளவு உணர்வுகளையும் தாண்டி, இவ்வளவு போராட்டத்திற்கும் நடுவில், அரசின் மசோதாக்கள் நிறைவேற்றம், அரசியல் அழுத்தம், தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற, எள்ளளவும் நம்முடைய கொள்கையில் மாறாமல் அரசு நின்று கொண்டிருக்கின்ற இந்நிலையில்* prospectus *வெளியிடக்கூடிய அந்த நிலையில் நாம் இருக்கிறோம். 26 ஆம் தேதி முடிவுகள் வெளிவருகிறதென்றால், மாணவர்களை எந்த அடிப்படையில் சேர்க்கப் போகிறோம் என்பதை நிச்சயமாக கல்வியாளர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், மக்களுக்கு நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதிலே சில கல்வியாளர்களே கேட்கிறார்கள். நீங்கள் இப்படிச் செய்தால் என்ன? அப்படிச் செய்தால் என்ன என்று பல்வேறு ஊடகங்கள் மூலமாக பல்வேறு விதமாகக் கேட்கிறார்கள். இருந்தாலும்கூட, எந்த நேரத்திலும், எந்த ஒரு சூழ்நிலையிலும், ஒருவேளை உச்ச*

2017 ஜூன் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வந்தாலும்கூட மாநில அரசு, கிராமப்புற மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது என்பதற்காக நாம் சட்ட வல்லுநர்களோடு—நம்முடைய மாநில பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டக்கூடிய வகையில் ஏதேனும் ஒரு விகிதாச்சார முறையில், உள் ஒதுக்கீடு போன்ற ஏதாவது நிலையை நாம் எடுக்கலாமா என்பதெல்லாம் குறித்துகூட, அதற்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதா—ஏனென்றால் நாம் ஒரு திடமான கொள்கை முடிவு எடுத்தால், அதுவும் நீதிமன்றத்தில் தடைபட்டுவிடக் கூடாது. ஆக, அப்படியெல்லாம் தடைபடாத அளவிற்கு, அதேநேரத்தில் இந்த கிராமப்புற மாணவர்களினுடைய பிரதிநிதித்துவம் காக்கப்பட வேண்டுமென்பதிலே மிக கவனமாக சட்ட நிபுணர்களோடு கலந்தாலோசித்துக் கொண்டிருக்கின்றோம். என்னென்ன வாய்ப்பு இருக்கிறது என்பதை நாங்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கின்றோம். கொள்கையில் உறுதியாக இருக்கின்றோம். நீங்கள் சொன்ன மாதிரி இதற்கெல்லாம் நிரந்தரத் தீர்வு என்பது (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். நிரந்தரத் தீர்வு என்பது—கல்வி என்பது முன்பு மாநில அரசு பட்டியலில் இருந்தது. இப்பொழுது concurrent list–ல் சேர்த்து விட்டார்கள். இதை மத்திய அரசு தான், நம்முடைய மாநில அரசின் சார்பில், இந்த உரிமையை நிலைநாட்டக்கூடிய வகையில் மாநில அரசின் பட்டியலிலே அதைச் சேர்க்க வேண்டும் என்பதிலேயும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களிடம் முன்வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய நிலைப்பாட்டை, அரசினுடைய நிலைப்பாட்டை, விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதுமாதிரி வழக்கம் இல்லை. தகவல் கோரல் என்ற முறையில்தான் அவர் கேட்டார். நான் அனுமதி கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப்பின் திரும்பவும் கேள்வி கேட்பது என்பது சரியாக வராது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'NEET' தேர்வு குறித்து மிகப் பெரிய விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அதில்

**[திரு. துரைமுருகன்]** *[2017 ஜூன் 15*

*ஒன்றும் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அவர் ஒரு டாக்டர். அந்த பாணியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,* Operation success, patient dead *என்பது மாதிரி விஷயம் போய்விட்டது,* 'NEET' *போய்விட்டது. இன்னும் ஜனாதிபதி மாளிகையையே எட்டிப் பார்க்கவில்லை. இத்தனை மாதமாக முண்டியடித்து முடிக்காமல் பேசுவதை, 'வேகமாகப் பேசுகிறேன்' என்கிறீர்களே, ஆட்சியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அங்கு போய் உட்கார வேண்டாமா? முதலமைச்சர் அங்கு போய் கேட்க வேண்டாமா? சும்மா உட்கார்ந்து கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு போய் உட்கார்ந்துவிட்டு, 'போனோம்', 'வந்தோம்' என்று பதில் சொல்கிறீர்களே? (மேசையைத் தட்டும் ஒலி) உண்டா, இல்லையா என்று மத்திய அரசைக் கேட்க வேண்டாமா? (குறுக்கீடுகள்)* Is that you don't dare to ask the Central Government? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11—50*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேகமாகப் பேசியிருக்கின்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு முறை பாரதப் பிரதமரைச் சந்தித்து, அதற்குண்டான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார். இவ்வளவு வேகமாக நீங்கள் பேசினீர்களே! காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு நீங்கள் மத்தியிலே கூட்டணி ஆட்சியிலே இருந்தபோது ஏதாவது செய்திருக்கிறீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், இருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.*

*2017 ஜூன் 15]* **[பேரவைத் தலைவர்]**

*(குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் பேசட்டும்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மிக வேகமாகப் பேசினார். உங்களுடைய கோரிக்கைகளை மத்திய அரசாங்கத்திடம் கேட்டீர்களா என்று கேட்டார். அதே வேகத்தில் நாங்கள் கேட்கிறோம். இன்றைக்கு 'NEET' பிரச்சினைக்குக் காரணமே, உங்கள் கட்சி மத்திய அமைச்சரவையில் இருந்தபோது, அன்றைக்கு மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசில்தான் முதன் முதலாக இந்திய மருத்துவக் கழகம் 'NEET' தேர்வுக்கான அறிவிக்கையை வெளியிட்டது. அப்போது கூட்டணி ஆட்சியில் இருந்த நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, இப்படியே விவாதம் நீளும். இன்றைக்கு 2 முக்கியமான மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். (குறுக்கீடுகள்) வேண்டாம். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள், போதும். (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) விடுங்கள், இப்படியே பேசினால் விவாதம் நீளும். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் சொன்னார். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது என்ன செய்தீர்கள் என்று கேட்டார். ஐயா, நாங்கள் செய்யவில்லை என்றுதான் உங்களை உட்கார வைத்தோம். நீங்களும் செய்யவில்லையென்றால் அதற்கு எதற்கு நாங்கள் இங்கு உட்கார்ந்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள்.*